சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு புரட்டாதிமீ கருஉ (1946 செப்டெம்பர் 1 செவ்வாய்க்கிழமை) [இல ருo

# மகாத்மா காந்தியடிகள் வாழ்க! வாழ்க!

வாழ்கநீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!

அடிமை வாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்,
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையுங் கணித்தல்;
மன்னுயி ரெல்லாங் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்
கிழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!

பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய்;
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ யறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத் தொழில் மறந்து
வையகம் வாழ்க நல் லறத்தே.

— பாரதி



நாளைக்கு (2-10-46) 78-வது வயது ஆரம்பம்

# ஓர் வேண்டுகோள்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இற்றைக்கு 58 வருடங்கட்கு முன்னர் ஸ்தாபிதமானது. இதன் அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா வருகிற 1948-ம் ஆண்டு நிகழும். இந்த 60-ம் ஆண்டுப் பூர்த்தி விழாவிற்கு முந்தியே, இச்சபையின் நோக்கங்களையும் இயன்றவரை பூர்த்திசெய்தற்காகிய ஸ்தாபனங்களை யமைத்தல் ஏற்புடைத்தாகும்; இச்சபை ஆற்றி வரும் பல்வகைத் தொண்டுகளையும் இருந்து செய்தற்குச் சபைபேரில் ஒரு சிறந்த காரியாலயம் ஆவசியகம் அமைக்கப்படுதல் வேண்டும்; காலந்தோறும் குருபூசைகள் செய்தற்கும், சமயபாட வகுப்புக்கள்வைத்து நடத்துவதற்கும், பிரசங்கங்கள் காலந்தோறும் செய்யப்படுதற்கும், இன்னும் வேண்டிய காலங்களிற்கூட்டங்கள் கூடுவதற்கும், இன்னும் புத்தகசாலை, சபையாரால் அழைக்கப்படும் பெரியார் யாரும் தங்குவதற்கும், சந்தியாவந்தனம், ஆன்மார்த்த பூசை, தெய்வவழிபாடு என்னுமிவைகளைச் செய்தற்கும் இன்ன பிறவற்றிற்குமாகிய மண்டபங்கள், அறைகள் முதலியனவற்றைக் கொண்ட ஒரு பெரிய ஆசிரமம் அமைக்க வேண்டுமெனவும், இப்படியமைத்தற்காகிய விஸ்தாரமுள்ள நிலத்தை இப்பொழுது விலைக்குவாங்கிக் கருமங்களை உடனே தொடங்குதல் வேண்டு மெனவும், சென்றமாசங்கூடிய சைவபரிபாலன சபை வருடாந்த மகாகூட்டத்தில் நிர்ணயிக்கப்படலாயிற்று.

மேற்படி நிர்ணயத்தின் பிரகாரம் சென்ற ஞாயிற்றுக்கிழமை(22-9-46) கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலைக் கணித்தாக, நீராவியடி நாற்சந்தியின் மருங்கில் பத்துப் பரப்புவரை கொண்ட நிலம் வாங்குதற்காகிய ஒழுங்குகள் செய்யப்படலாயிற்று; மேலே சொல்லப்பட்ட நிலத்தை வாங்குவதற்கும், சிறந்த ஆசிரமத்தை அமைப்பதற்கும் ஒருலட்சம் ரூபாவரையில் தேவையென மதிப்பிடப்பட்டிருக்கின்றது; சபைகுறித்த நிதியின் பொருட்டுச் சைவாபிமானிகளாயுள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற பணவுதவி செய்ய வேண்டுமென, இச்சபையின்பேரால் நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம். மேலும் [illegible]

## நேருஜி இலங்கைக்கு வருகிறார்

பண்டிதநேரு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூடிய சீக்கிரம் இலங்கைக்கு விஜயம் செய்ய தாம் உத்தேசித்திருப்பதாய்த் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை மக்களுடன் நேசபான்மையான முறையிலே சம்பாஷித்து இரு நாடுகளுக்கு மிடையிலுள்ள பிரச்சினைகளை சமரஸமாகத் தீர்க்க நாம் முயற்சித்துவந்திருக்கிறோம். இனியும் இந்த வகையில் தீவிரமாக முயற்சிசெய்ய நாம் உத்தேசித்திருக்கிறோம்.

அபிமானிகளின் பெயருந் தொகையும் விபரமும் காலந்தோறும் இந்துசாதன ஆங்கிலதமிழ்ப் பிரசுரங்களில் வெளிவருமெனவுந்தெரிவிக்கின்றோம். பணம் அனுப்பும் அன்பர்கள்,

கௌரவ காரியதரிசி, சைவபரிபாலனசபை C/o இந்துசாதனம் வண்ணார்பண்ணை என்ற விலாசத்திற்கு அனுப்பலாகும்.

இங்ஙனம்
இ. சிவகுருநாதர்
ஐ வ. குலசிங்கம்
கா. சண்முகம்
அ. அருளம்பலம்
மு. மயில்வாகனம்
[illegible] வைரவிழாச் சபையார்க்காக.

## மா வருகிறது!

### 3ம் திகதியும் 6ம் திகதியும்

ஆஸ்திரேலியாவிலிருந்து வேறெங்கோ போகவிருந்த மாக்கப்பல் ஒன்று கொழும்புக்குத் திருப்பப்பட்டிருக்கிறது. இக்கப்பல் வருகிற வியாழக்கிழமை கொழும்பை வந்து சேரும். இக்கப்பலில் எவ்வளவு தொகை மா உண்டு என்பதுதெரியாதாம்.

இந்தக் கப்பலை விட., இன்னொரு கப்பல் 11,000 தொன் மாவுடன் 6ம் திகதி கொழும்புக்கு வரும்.

### 'பென்ஷ'ன் உயர்வு கேட்கிறார்கள்

இலங்கை பென்ஷனர்கள் இதர அரசாங்க உத்தியோகஸ்தர்களைப்போல் தங்களுக்கும் 40 விகிதம் பென்ஷன் உயர்வு கொடுக்க வேண்டுமென்று அரசினரிடம் ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

### ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியின் அமெரிக்க பிரயாணம்

ஐக்கிய நேசதேச ஸ்தாபனத்துக்கு இந்திய தூதுக்கோஷ்டியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அக்டோபர் இரண்டாவது வாரத்தில் ஐக்கியஅமெரிக்காவுக்குப் புறப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேஷ விஞ்ஞாபனம்

மகாநவமி, சரசுவதிபூசை, விஜய தசமி, மானம்பு உற்சவம் என்னு மிவ் விசேஷநிகழ்ச்சிகள் காரண மாக, இந்துசாதனாலயம் யாழ்ப் பாணம் சைவப்பிரகாச யந்திர சாலையென்னுமிவற்றிற் கடமை பார்ப்போர்க்கு விடுமுறை உத வப்படுதலின், வருகிற வெள்ளிக் கிழமை (4-10-46) இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவராவென்பதை அபிமா னிகட்குத் தெரிவிக்கின்றேம்.

மனேஜர்.

---

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹூ
புரட்டாதி கருஉ செவ்வாய்க்கிழமை

## நவராத்திரி காலத்திற் கவி படித்தல்

நவராத்திரி காலம் சைவ வைஷ்ணவ மக்களனைவருக்கும் விசேஷ புண்ணிய காலமென்பது நிசம்; மற்றைப் புண்ணிய தினங்கள் காலங்களைக் காட்டிலும், இந்த நவராத்திரி காலம் கல்வி வீரம் வெற்றி யென்னுமிவைகளுடன் விசேஷ தொடர்புடையதாகக் காணப்படுகின்றது; இப்புண்ணியகாலம் தென்னிந்தியாவிலும் இந்த இலங்கை முதலிய நாடுகளிலும் நவராத்திரியென்னும் நாமத்துடன் வழங்கப்பட, வட இந்தியாவிலே, விஜயதசமித் தினத்தையுஞ்சேர்த்து தசரா (பத்து இரவு) என வழங்கப்படுகின்றது. நவராவாக, தசராவாக இந்த விசேஷ இரவுகளிலே அந்தணர் விசேஷ பூசை வேதமோதுதல் முதலாம் சத் கருமங்களையும், அரச குலத்தோர் படைக்கலப் பயிற்சிக்குரிய செயல்கள், கொலு வீற்றிருத்தல், கற்றாரைச் சன்மானித்தல் முதலிய கருமங்களையும், ஏனைய சாதியினர்தத்தமக்குரியவிசேஷ கருமங்களையும்தவறவிடாது சீராகக் கொண்டாடி வரலாயினர்;

கல்வி விஷயமாகச் சொல்லுகில், பண்டுதொட்டு வித்தியாசாலைகளிலுள்ள உபாத்தியாயர்களும், மாணக்கர்களும் ஆரம்ப தினமாகிய கன்னித் திங்கட் சுக்கில பக்கப் பிரதமைத் தினத்தன்றே தத்தம் வித்தியாசாலைகளிற் கும்பதாபனஞ் செய்து தேவிக்கு விசேஷ ஆராதனை வழிபாடுகள் செய்து வருவாராயினர்; அவ்வளவோ டமையாது இந் நவராத்திரி காலத்திலே உபாத்தியாயர்களும், பிள்ளைகளும் காலைப்போதிற் பள்ளிக்கூடத்திற் சென்றுகூடிக் கும்ப பூசை, தரிசன மென்னுமிவைகளை முடித்தபின், நவராத்திரி காலத்தில் வீடுகள்தோறுஞ் சென்றுபாடுதற்கென விசேஷமாய் மாணக்கருக்குப் பயிற்றிவைத்த பாக்களை முறையே ஓதும்படி பிள்ளைகளை உபாத்தியாயர்கள் அழைத்துச் சென்று, அப் பிள்ளைகளின் பெற்றார் வீட்டிலும், மற்றைப் பெரியார் வீடுகளிலும் படிக்கச்செய்வர்; பெற்றாரும் பெரியாரும் பிள்ளைகள் படிக்கும் பாடல்களைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து, அப் பிள்ளைகட்குச் சிற்றுண்டி வழங்கி, உபாத்தியாயருக்குஞ்சன்மானஞ் செய்து தொன்மைபாராட்டுவர்; சிலஆசிரியர்கள் தம்மாணக்கர்களுக்கு இசையோடுகூடிய கோலாட்டம்கும்மி முதலியவற்றைப் பயிற்றி, அப்பெற்றார் பெரியார் முன்னிலையில் அவற்றை மாணக்கர்களைக் கொண்டு செய்வித்து மகிழ்ச்சியூட்டுவர். இதனற் பெற்றார்க்கும் பெரியார்க்கும் ஆசிரியர்க்கும் பிள்ளைகட்கு மிடையேயுள்ள தொடர்பு விருத்தியுறுகின்றது. இந்த முறையானது ஒரு அளவிற்குப் பழைய குரு குல வாச முறையை யொத்தது எனலாம்.

நவராத்திரி காலத்தில் வீடுதோறுஞ் சென்று கவி படித்தலாகிய இந்த முறை, இங்குள்ள சைவ வித்தியாசாலைகளில் மாத்திரமல்லாமல், மிஷனரிமாரால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர் மாணக்கர்களாலும் கைக்கொள்ளப்பட்டு வந்தமையை நாம் அறிவோம். இக்காலத்திலும் நாட்டுப்புறத்துள்ள சைவ வித்தியாசாலைகளில், நவராத்திரி காலத்தில் விருத்தம் படித்தலாகிய இந்தச் சிறந்த வழக்கம் காணப்படுகின்றதெனலாம்; ஆனற் பட்டினப் பகுதியிலுள்ள சைவப் பள்ளிக்கூடங்களில் இக்காலத்தில் நவராத்திரிக் கவி படித்தலாகிய கொள்கை அருகி வரலாயிற்று; இங்குள்ள பழைய சைவ வித்தியாசாலையிற்றானும் நவராத்திரி காலத்திற் கவி படித்தலாகிய கொள்கை கைவிடப்படலாயிற்று; வேறு சில சைவ வித்தியாசாலைகளில் உபாத்தியாயர்கள் தம் மாணக்கரை யழைத்துத் தொன்மைபோல் இல்லந்தோறுஞ் சென்று நவராத்திரி விருத்தம் படித்தலாகிய நல்ல கருமத்தைத் தவிர்த்துவிட்டு, "இருக்குமிடந் தேடியென் பசிக்கே யன்னம் உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்....", என்றாங்கு, நவராத்திரி காலத்திற் பணமுதவும்படி விஞ்ஞாபனம் அச்சிட்டுப்பிள்ளைகள்மூலம் பெற்றார்க்கு அனுப்பிவிட்டுப் பள்ளிக்கூடம் வைத்து நடத்துகின்றார்கள்; இன்னுஞ்சிலர் "நவராத்திரியிற் கவிபடித்தல் பழைய கர்நாடக முறையாகும்; பழையன கழிதலும் புதியன புகுதலும்வழுவலகால முறையினனே" என்று பிரமாணசகிதமாக நியாயஞ்சொல்லிவிடுகிறார்கள்: இவையெல்லாஞ் சமயப் பற்றின்மையாலும், விபரீத கொள்கையினலும், கேட்பாரின்மையாலும் வந்த கெடுதி யெனலாம், இக்காலத்திலுள்ள உபாத்தியாயருட் பலர், பாட்டைப் படிக்க வேண்டிய முறைப்படி இசையுடன் தாமும் படிக்கவியலாராய் அப்பாட்டுக்களை வசனம்போற் சொல்லிக்கொடுத்தலும், பிள்ளைகளும் அப்ப...

## நவராத்திரி காலத்தில் இலக்குமி சரசுவதி வாழ்த்து





செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரும்
எழின்மேனித் திருவே வேலை
அங்கணுல கிருள் துரக்கு மலர்கதிராய்
வெண் மதியாய் அமரர்க்கூட்டும்
பொங்கமுலா யுலகளிக்கும் பூங்கொடியே
பொருப்பில் மண்ணில்
எங்குளைநீ யவணன்றே மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யி ுப்ப தம்மா.

தாவறு மூலசேலாங்
தந்த நான் முகத்
தேவுதன் றுணைவியாய்ச்
செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடு
நலங்கோள் வாணிதன்
பூவடி முடிமிசை
புனைந்து போற்றுவாம்

---

னம் பண்ணிக்கொண்டு, கதை பேசுவார்போற் பாடம் ஒப்புவித்தலும், கோயிலிலே புராண படனம் நிகழும்போது, அப்படியான உபாத்தியாயரை, புராணம்வாசிக்கும்படியேனும் பொருள் சொல்லும்படியேனுங் கேட்டால், "வாசிக்க அறிவேன்; ஆனல் இராகம் வராது. பொருள் விளங்கும், சொல்ல அறியேன்" என்று கூறிவிட்டு, அவயத்து முந்தியிருப்பதற்குப் பதிலாக அந்த உபாத்தியாயர்கள் பிந்தியிருப்பதும் இப்படி நவராத்திரி காலத்தில் இசையோடு கவி படித்தல் முதலிய நற்கருமங்களை, பழையனகழிதல் என்ற முறையில் அறவே கைவிட்டதனல் வந்தகேடாகுமெனல் மிகையாகாது.

நவராத்திரி காலத்திலே பிள்ளைகளுக்குக் கவி படிக்கப் பயிற்றுதல், அவர்களை இல்லந்தோறும் கூட்டிச் சென்று கவி படிக்கச் செய்தல் என்னுமிவற்றை உபாத்தியாயர்கள் சிரமமென்ற காரணம்பற்றிக் கைவிட்டார்களோவெனின், இல்லை, இல்லை, ஒருபோதுமில்லை; எனெனிற் கூறுதும்; வித்தியாபகுதியார், பிள்ளைகளுக்கு 'டிறில்' பயிற்ற வேண்டுமெனப் பிரமாணம்விதித்துவிட்டால், அப்பிரமாணத்தை மேற்கொண்டு அப்பிள்ளைகளை மத்தியான வெயிலென்றும் பாராது உச்சிவெயிலில் தாமும் நின்று அப்பிள்ளைகளையும் நிற்கச் செய்து தேகப்பயிற்சி பயிற்றும் உபாத்தியாயர்கள், வித்தியாபகுதியார் தலைமை வகித்து நடத்துங் கூட்டமென்றால், 20மைல் தூரமெனினும் பஸ்மூலமாகவும் புகைரதமூலமாகவும் பிள்ளைகளையுங் கூட்டிக் கொண்டு தாமும் போய்ச் சேர்ந்து அக் கூட்டத்திற் பங்குபற்றும் ஆசிரியர்கள், சுகாதாரவார காலத்திலே வித்தியா பகுதியாரின் நிபந்தனைக்கிணங்க, பட்டினத்தின் சுகாதார நிலைமையைக் காட்டும் வண்ணம் மாணக்கர்களையும் கூட்டிக்கொண்டு, இந்தப்பட்டினத்திலுள்ள சுகாதாரத்துள் அமையாத, அழுக்கோடும் அசுசியோடுங் கூடிய, தெருக்கள் ஒழுங்கைகள் கான்கள் மலசலகூடங்களின் மருங்குகளாகிய இடங்களெல்லாம் தாம் பார்த்தும் பிள்ளைகளுக்குக் காட்டியும் வெயிலொடு கூடிய பகல் முழுவதுந் திரிந்த கணக்காயர், தம் வேதன விருத்தியின் ... சிரமமெல்லாம் பட்டும் காணத்தகாதவரைக் கண்டும் இடர்ப்படும் வித்தியாகுரவர், சிரமமென்ற காரணம்பற்றி நவராத்திரிக்கவி படிப்பிக்கும் முறையைக் கைவிட்டார்களென்று சொல்லுதல் தோஷமாகும். இவர்கள் சீருறும் நாள் எந்நாளோ அறியோம்; ஆனற் பழைய சிறந்த முறைகளைக் கைக்கொண்டு சமயாபிமானம் பூண்டாராய், தமிழைத் தமிழ் மரபின்படி மாணக்கர்களுக்குப் பயிற்றி வரும் சிறந்த ஆசிரியர்கள் இன்னுஞ் சிலர் இந்நாட்டிலுண்டு; அவர்களைப் பாராட்டுகின்றேம்.

---

## பர்மாவில் தேசீய அரசாங்கம்

ஜப்பானியராட்சி ஒழிந்ததும், பர்மா பழையபடி பிரிட்டிஷார் கைக்கு வந்தது. ஆனல், பர்மாவைத் தொன்மைபோல அடிமை நாடாகப் பிரிட்டிஷார் வைத்திருக்க விரும்பியதை பர்மியத் தலைவர்கள் ஆட்சேபித்தனர். பர்மியத் தலைவர்களையும்,பொதுஜனங்களையும் புறக்கணித்து பிரிட்டிஷார் ஆட்சியைநடத்தச் சென்ற ஒருஆண்டுகாலமாக முயற்சி செய்தனர். அம் முயற்சி அநுகூலமடையவில்லை.

இதற்கிடையில் பர்மாவில் மிகவும் குழப்பமான ஓர்நிலைமை ஏற்பட்டது. அமைதியின்மை ஏற்பட்டது, கொள்ளை, களவு நோய் எல்லாம் பரவின. நாட்டில் அமைதி நிலவவேண்டுமானல், நாட்டின் பரிபாலனத்தைப் பர்மியர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்னும் உண்மையை அவர்கள் உணர்ந்து, ஆங்ஸேன் என்னும் பர்மியத் தலைவரைப் பிரதமராகக்கொண்ட ஓர் பொறுப்பாட்சியை இப்போது ஏற்படுத்தியுள்ளனர். இந்தியாவிலே நேரு அரசாங்கம்போல இது இருக்கும்.

---

## நீர்வேலியில் காந்தி ஜெயந்திவிழா

2–10 45ல் மலை நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை மைதானத்தில் மகாத்மாஜி அவர்களின் பிறந்ததின விழா நடைபெறும். 4-30 மணியளவில் மகாத்மாஜியின் படம் ஊர்வலமாக வரும். 7-30–க்குப் பொதுக் கூட்டம் திரு H. S பேரின்ப நாயகம் (அட்வகேட்) அவர்கள தலைமையில் ஆரம்பமாகும். திருகோணமலை சுதந்திர சேவாசங்கத் தலைவர் கோ. இராசகோபால் முதலிய பெரியோர்கள் பேசுவார்கள் என்றும்அறிகின்றேம்.

—கடித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட பகுதித் துறைமுகங்கள்

## திறக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம்

(நமது நிருபர்)

இப்போது ஆகாசவிமான மூலம் இந்தியாவுக்குப் போக விரும்புபவர்கள், கொழும்புக்குப் போய், அங்கிருந்துதான் பிரயாணம் செய்ய வேண்டும். இது பெரும் சிரமத்துக்கும் பொருட்செலவுக்கும் ஏதுவானதாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்தே ஆகாச விமானமூலம் பிரயாணம் செய்யத் தாம் கூடிய சீக்கிரம் ஒழுங்குகள் செய்யஉத்தேசித்திருப்பதாக, போக்குவரத்து மந்திரி மிஸ்ரர் ஜே. எல். கொத்தலாவலை எனக்குக் கூறினர்.

இப்போது பலாலியிலே, ராணுவத்துக்குச் சொந்தமாயிருக்கும் விமானநிலயத்தை அரசாங்கம்பெற்றுப் பிரயாண வசதிகள் செய்ய முயற்சி செய்யும் என்று மிஸ்ரர் கொத்தலாவலை கூறினர்.

இந்த விமான நிலயத்தை இலங்கை அரசாங்கம் பெற்றபின், இந்தியாவுக்குப் போவனவும், இந்தியாவிலிருந்து வருவனவுமான விமானங்கள், இங்கே தங்கிப் பிரயாணிகளை ஏற்றவும் இறக்கவும் வசதிகள் செய்யப்படுமாம்.

வடபகுதித் துறைமுகங்களைத் திறப்பதால், யாழ்ப்பாண மக்கள் நன்மையடைவரே: அவற்றை ஏன் திறக்க அரசாங்கம் முன்வர வில்லை என்று மிஸ்ரர் கொத்தலாவலையை நான் கேட்டேன்.

“வடபகுதித் துறைமுகங்களைத் திறந்து பிரயாணிகள் போக்குவரத்துச் செய்வதற்கு வசதிகள் செய்ய வேண்டியது அவசியமே என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனல் இப்போதுள்ள நிலையில், ஒரு துறைமுகத்தைத் தான் நாம் திறக்கலாம். அது எது என்பதில் பிணக்கு ஏற்படுகிறது. ஒரு சாரார் ஊர்காவற்றுறை என்கிறார்கள்; இன்னொரு சாரார் காங்கேசன் துறை என்கிறார்கள்: பிறிதொரு சாரார் பருத்தித்துறை என்கிறார்கள். இந்த மூன்று சாராரும் தாம்தாம் விரும்பும் துறைமுகத்தையே முதலில் திறக்கவேண்டும் என்று பரஸ்பரம் மாறுபட்டு நிற்பதால், அரசாங்கம் ஆருக்கென்று கருமம் செய்வது? இங்குள்ளார் ஒற்றுமை கொண்டு ஒரு துறைமுகத்தை முதலில் திறக்கச் சொன்னல் அரசாங்கம் அதனைச் செய்ய ஒரு போதும் பின்னிற்கமாட்டாது’ என்று மிஸ்ரர் கொத்தலாவலை கூறினர்.

இப்படியான விஷயங்களில் அபிப்பிராயபேதம் ஏற்படுவது இயல்புதான். இந்த அபிப்பிராய பேதங்களைப் பொருட்படுத்தாது ஏதாவது ஒரு துறைமுகத்தைத் திறக்க அரசாங்கம் முன்வந்தால் என்ன என்று நான் கேட்டேன்.

அந்த முறையைத்தான் இனி நாம் கைக்கொள்ள வேண்டியிருக்கிறது என்றார் மிஸ்ரர் கொத்தலாவலை.

## இந்தியப்பிரதிநிதிகள்

### நேரு அறிவிப்பு

வரப்போகும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச்சபைக் கூட்டத்திற்குக் கீழ்க்கண்ட பேர்கள் இந்தியா சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக பண்டித நேரு அறிவித்தார். அவர்கள்:—

(1) விஜயலட்சுமி பண்டிட்
(2) நவாப் அலி யவார் ஜங்
(3) நீதியரசர் சாக்லா
(4) பிராங் அந்தோனி
(5) கே, பி. எஸ். மேனன்
(6) ஆர். எம் தேஷ்முக்

இன்னும் சில பெயர்கள் கூடிய சீக்கிரம் அறிவிக்கப்படுமென்றுநேரு கூறினர். இப்பிரதிநிதிகள் இந்தியாவின் கொள்கையை சர்வதேச ஸ்தாபனத்தில் வற்புறுத்தச் செல்வதாக நேரு குறிப்பிட்டார்.

## மண்ணெண்ணெய்க் கட்டுப்பாடு

செப்டெம்பர் மாதம் முடிந்ததும் மண்ணெண்ணெய்க் கட்டுப்பாட்டு முறை நீக்கப்பட்டுவிடும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் அரசாங்க சுகாதாரப் பகுதியார், மலேரியா ஒழிப்பு வேலைக்காக, மண்ணெண்ணெயை அதிகமாக உபயோகித்து வருவதால், பொதுஜன உபயோகத்துக்கு அதிகம் எண்ணெய் இப்போதைக்குக் கொடுக்கமுடியாதபடியால், மண்ணெண்ணெய்க் கட்டுப்பாடு இன்னும்மூன்றுமாத காலத்துக்குத்தொடர்ந்து இருக்கும் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

## இராமநாதன் உருவச்சிலை

காலஞ்சென்ற ஸர். பொன்னம்பலம் ராமநாதனின் உருவச்சிலை அரசாங்கசபை மைதானத்தில் பத்திரிகைப் பிரதிநிதிகளின் ஸ்தானத்துக்குச் செல்லும் வாசலுக்கு நேராக லோட்டஸ் தெருவை நோக்கியிருக்கும் ஒரு இடத்தில் இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. மறுபக்கத்தில் பேரையாற்றை நோக்கியவாறு உள்ள இடத்தில்தான்இவரது சகோதரர் ஸர். பொன்னம்பலம்அருணசலத்தின் உருவச்சிலை வைக்கப்பட்டிருக்கிறது. ஸர். ராமநாதன் 16 வருடங்களுக்கு முன்னல் 1930-ம் வருடம் நவம்பர்மாதம் 26-ம் தேதி சிவபதமடைந்தார்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
தத்துவ வழக்கு இல. 348.

காலஞ்சென்ற சுப்பிரமணியர் விஞசித்தம்பியின் ஆதனத்துக்குத் தத்துவம்.
காரைநகர் மேற்கு விஞசித்தம்பி கைம்பெண் செல்லாச்சிப்பிள்ளை
தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 348ம் உருமைத் தத்துவ இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1946ம் ஆண்டு ஐப்பசிமாதம் 26ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நாலு மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்:

1. காரைதீவு தங்கோடை இறைவாரியாதனை நெற்பரப்பு 27 எல்லை கிழக்கு அருணசலம் கந்தையா, வடக்கு கந்தையாபெண் மீனுட்சி மேற்கு அம்பலவாணசுவாமி கோவிலாதனம், தெற்கு ஒழுங்கையும் குளமும் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

2. காரைதீவு தங்கோடைஇறை வயிரவன்காடு நிலப்பரப்பு 19: எல்லை கிழக்கு காசிநாதர் பெண் தங்கம்மாவுக்கும் இன்னெருவருக்கு முரிய வாதனம் வடக்கு சபாபதி தம்பையாவுக்கும் மறுபேருக்கு முரிய வாதனம், மேற்கு முருகேசு ஆறுமுகத்துக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம், தெற்கு ஆறுமுகம் சின்னத்துரையின் ஆதனம், இதில் அரைவாசி.

ஆ. ச. கந்தையா,
காரைநகர், கொம்மிஷனர்.
20-9 45
Mis 185, 1.10 46.


# திருநின்ற செம்மை

வித்துவான் க. வெள்ளைவாரணர்
(அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்)

(முற்றொடர்)

இத்தகைய செம்பொருளுணர்வு வாய்க்கப்பெருதார் நிலைபெற்ற திருவினரல்லராவர். அவர் தம்வாழ்நாளிற பேசும் மொழியனைத்தும் பொருளற்றனவாய்ப் பயனின்றி யொழிகின்றன. எல்லாச் செல்வத்திற்கும் நிலைபேருகிய செம்பொருளின் திருப்பெயரே ஒருவர்க்கு வீயாத்திருவினை வழங்கவல்ல சிறப்பு வாய்ந்ததாம். இவ்வுண்மையை நம்மனேர்க்கு அறிவுறுத்தக் கருதிய தமிழ் வேந்தராகிய அடிகள்,

‘சிவனெனு மோசையல்ல தறையோ
வுலகில் திருநின்ற செம்மையுளதே
அவனுமோரைய முண்ணியதளாடை
ததன்மேலோ ராடலாவம் [யாவ
கவணளவுள்ளவுள்கு கரிகாடுகோயில்
கலனுவதோடு கருதில்
அவனது பெற்றிகண்டு மவனீர்மை
மகனோர்வர் தேவரவரே” [கண்டு

என்ற திருப்பாடலின் முதலடியில் இதனை நன்கு எடுத்து உரைத்தருள்கின்றார்.

முழுமுதற் பொருளாகிய இறைவனுக்குரிய திருப்பெயர்களுள் சிறப்புடையதாக விளங்குவது சிவன் என்னுந் திருப்பெயராகும். இது செம்பொருள் என்னும் பொருளதாய் எல்லாத் திருவிற்கும் நிலைக்களனுகிய இறைவனைக் குறித்துநிற்பதாம். அன்றியும், திருவுருவ நிலையில் வைத்து வழிபடுங்கால் செம்மைபெற்ற திருமேனியுடையான் என்னும் பொருளில் சிவன் என்னும் திருப்பெயர் ஆன்றோர்களால் ஆளப்படுகின்றது.

“செம்மேனிப்பேராளன் வானேர்பிரான்” என்னும் அம்மையார் வாய்மொழியால் இஃதுணரப்படும்; இவ்வாறு செம்மைநிறமுடையவன் செம்மைப் பண்புடையான் என நிறம்பற்றியும் இறைமைக் குணம்பற்றியும் வழங்கும் சிவன் திருப்பெயரே, உலகியற் சுழலில் அலமருவோர் ஆண்டவனை நோக்கி அறையோ என முறையிட்டு அழைப்பதற்குரிய முறையீட்டொலியாகும். இவ்வழகிய திருப்பெயரன்றிப் பிற பொருள்பற்றிய சொற்கள் துன்புற்றோர் இன்பம் பெற அழைக்கும் முறைமீட்டுச் சொற்களாமோ? ஒருகாலும் அவ்வாருகா என்பார், “சிவனெனும் ஓசையல்லது அசையோ” எனத் திருநாவுக்கரசர் வினவுகின்றார், அறையோ என்னுஞ் சொல் தாழ்ந்தோர் உயர்ந்தோரையழைக்கும் முறையீட்டொலியாக ஆளப்படுதலைக், “காண்டலே கருத்தாய் நினைந்திருந் தேன்மனம் புகுந்தாய் கழலடி பூண்டுகொண்டொழிந்தேன் புறம் போயினல் அறையோ” என இறைவனை நோக்கி இப்பெருந்தகையார் முறையிட்டு அழைக்கும் திருப்பாடலாலறியலாம்.

இங்ஙனம் செம்மேனியம்மாஞகிய இறைவனை அறைகூவி யழைத்தற்குரிய திருப்பெயராகிய சிவன் என்னும் இனிய ஓசையொன்றே உலகில் என்றும் நிலைபெற்ற பெருந்திருவுக்கு நிலைக்களமாகியசெம்பொருளையுணர்த்துந் திறமுடையது. பிறவோசை அத்திறமுடையன அல்ல என்பார், “சிவனெனும் ஓசையல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மையுளதே” எனத் தெளிவுபெற அறிவித்தருள்கின்றார்.

“சிவனெனும் நாமந் தனக்கே
யுடையசெம் மேனி எம்மான்
அவனென்னை யாட்கொண் டளித்திடு
மாகி லவன்றனை யான்
பவனெனும் நாமம் பிடித்துத்
திரிந்துபன் னுளழைத் தால்
இவனென்னைப் பன்னுள் அழைப்பொழி
யானென் றெதிர்ப்படு மே.”

என்ற திருப்பாடலிலும் இத்திருப்பெயரின் செம்மையினை அரசர்நன்கு விளக்குகின்றார்,

இங்ஙனம் இறைவன் அருள்பெற்றுச் செம்மை நெறியொழுகி, அப்பெருமான் அருளிய அருளற வழிகளைத் தாம் உயிர்களின்பால் வைத்த பேரருளால் உலக மக்களுக்கு உணர்த்தி, அவர்களைத் திருவருள் நெறியாகிய செம்மை நெறிக்கட் செலுத்துதலையே குறிக்கோளாகக்கொண்ட திருநாவுக்கரசடிகளார், தாம்பெற்ற பெருந்திருவினையே ஏனையோரும் பெறுமகிழப்பெருந்தொண்டுசெய்த வரலாறுஉலகறிந்த சிறப்புடையதாம்.

இங்ஙனம் ‘திருத்தொண்டின் நெறிவாழ’ சிவன் என்னுந் திருப்பெயரே திருநின்ற செம்மை யுடையதெனத் தேர்ந்து அத் திருப்பெயரால் இறைவனை வழிபடும் செம்மை நெறியினை உலகினர்க்கு அறிவுறுத்தருளிய பேரருளாளர் திருநாவுக்கரசராதலின் அவர்தம் ‘பெருநாமச் சீர்பரவ’ விரும்பிய நம்பியாரூரர் தொண்டர் சீர்பரவத் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தில்,

“திருநின்ற செம்மையே
செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன்
அடியார்க்கும் அடியேன்”

என்ற தொடரால் அப் பெருந்தகையாரைப் பரவிப் போற்றுகின்றார்.

இதுகாறுங் கூறியவாற்றல், திருவாவது இஃதெனவும், அது நிலைபெறுமாறு இதுவெனவும், அங்ஙனம் நிலைபெற்ற திருவாதற்கு முழுமுதற் கடவுளாகிய செம்பொருளே நிலைக்களம் எனவும், அத்தகைய முதற் பொருளை வழிபடுதலாகிய செம்மை நெறியொழுகி உலகின்நலம் வளர்த்த திருத்தொண்டர் திருநாவுக்கரசர் எனவும், இவ்வுண்மை அரசருளிய திருமுறைகளால் இனிதுணரப்படுமெனவும், இவ்வியல்பினை நன்குணர்ந்தே நம்பியாரூரரும் “திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்” என அப்பெருந்தகையாரைப் பரவிப் போற்றினரெனவும் ஒருவாறு விளக்கியவாறும்.

—சித்தாந்தம்

## சரவணைச் சைவ அன்பர் கழகம்

ஷை கழகத்தின் ஓர் விசேட நிர்வாகசபைக்கூட்டம் சரவணை “நாகேசுவரி” வித்தியாசாலையில் 22-9-46 மாலை 5-30மணியளவில் தலைவர் திரு. சி. முருகேசபிள்ளை அவர்களின் தலைமையின்கீழ்க் கூட்டப்பட்டது. கூட்டத்தில் கழக வாசிகசாலையின் முன்னேற்றம்பற்றியும், கழக முன்னேற்றம்பற்றியும் ஆலோசித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக் கூட்டத்தில் ஷை கழகத்திற்கு ஓர் புதிய தனதிகாரியைத் தெரிவுசெய்ய வேண்டுமெனக் கழக அங்கத்தினர்கள் வேண்டினர். திரு. மா. இலிங்கப்பிள்ளை என்பவரைத் தனதிகாரியாகத் திரு. செ. சுப்பிரமணியம் பிரேரிக்கத் திரு. மூ. மாநதையனர் ஆமோதித்தார். இரவு 6-30 மணியளவில் கூட்டம் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரியமும் - தமிழும்

[ தமிழ் வாசிக்கும் மாணவர் விரும்பியபடி
குவாலாலம்பூர் திரு. அ. சிவகுருநாதன் எழுதியது].

(முற்றொடர்

இனி முறையான கல்வியின் பயன் வருமாறு:

"அறம் பொருளின்பமும் வீடும்
பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் —
உறுங்கவலொன்
றுற்றுழியுங்கை கொடுக்கும்
கல்வியினூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை"

என்றும்,

"நற்பொருள் செய்வார்க் கிடம்
பொருள் செய்வார்க்கு மஃதிடம்"

என்றும்,

"எழுத்தறியத் திரு மிழிதகைமை
தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா
னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற்
பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்றுங் கூறப்பெறும்

இங்கே எழுத்தென்றது ஐந்திலக்கண நூல்களை. அவை பஞ்சலக்கணமெனப்படும். மொழித் திறம் என்றது இலக்கியமாகிய பல கலைகளை. இலக்கணமறியார் கல்வியை "எழுத்தறியார் கல்வி" என்றார் பிறரும். அதனால் அறியாமை தீராது. ஆதலால் "எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" என்றும், 'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்றுங் கூறப்படும். எண் - நியாயநூல்; எழுத்து - இலக்கணம்; இவ்விரண்டுங் கொண்டு இலக்கியத்தின் மெய்ப்பொருள் அறிதல்கூடும். அவ்வாறு முறையாகப் பெறும் மேலான அறிவினால் முதனூற் பொருளுணர்தல் கூடும். முதனூல் என்றது இறைவன் அருளிய வேதாகமங்களாம். இந்நாளில் பெரும்பாலும் தமிழ் படித்தோம் என்ற மட்டிலுள்ள பலர் நூற்பொருள்களை விபரீதம்பட விளங்குதற்கும் குதர்க்கம் பேசுதற்குங் காரணம் இலக்கண விளக்கமும் நியாய நூலறிவும் பெருமையாகும். எழுத்தறியார் கல்வியினால் விபரீத விளக்கமும் அதனால் தீமைகளுமுண்டாம்.

"அழித்துப் பிறக்கவொட்டா
அயில்வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக்
கற்கின்றிலீர்"

என்றார் அருணகிரிநாதர்.

எனவே, இம்மையும், மறுமையும், வீடும் பெறுதற்குரிய உண்மைக் கல்விக்கேதுவாகும் வடகலையுந் தென்கலையும் மெய்யறிவை வளர்க்கும் புகழ் பெற்றன. அதனாற் போலும் மெய்யறிவாகும் பதி ஞானத்தால் உணரப்படுமிறைவனை "ஆரியமுந் தமிழுமானான் கண்டாய்" என்றார் நாவரசர் பெருமானும்.

இனி, தமிழரான நம்மனோர் தற்காலக் கல்விநிலை கவலைக்கிடமாகும். அதன் காரணம் தமிழ் மொழியில் அபிமானம் வைத்து நாள்தோறும் அதனைக் கற்றலுங் கேட்டலும் பேசிப் பழகலும் செய்யாமையும். தமிழ்க் கல்வியினால் பெறப்படும் நல்லறிவும் அறிவொற்றுமையும் கட்டுப்பாட்டுக்கமையும் நல்ல பழக்கமும் இல்லாமையென்பதும் வெளிப்படையாகும்.

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு
— நம்மி
லொற்றுமை நீங்கி லனைவர்க்குந்
தாழ்வே"

என்றார் தமிழபிமானியாகிய பாரதியும். அதனால் தாமே யாடுதற்குப் பதிலாக ஏனையர் ஆட்ட ஆடுந் தன்மையராதலும் வியப்பன்று.

"சித்திரமுங் கைப்பழக்கம்
செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி
மனப் பழக்கம்"

என்றபடி நல்ல தமிழுக்கும் நாப் பழக்கமில்லாதவருக்கும் நெடுந்தூரமாகும்.

'தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது
மெலும்பு பெண்ணுருவாக்
கண்டது மறைக் கதவினைத்
திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச்
சொற்களோ சாற்றீர்"

என்றும்

"கண்ணுதற் பெருங் கடவுளுங்
கழக மோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப்
பசுந்தமிழேனை
மண்ணிடைச் சில விலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப் படக் கிடந்ததா
வெண்ணவும் படுமோ"

என்றும்,

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோ லினிதாவ
தெங்குங் காணோம்
பாமரராய் விலங்குகளா
யுலகனைத்து மிகழ்ச்சி சொலப்
பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக்
கொண்டிங்கு வாழ்ந்திடுதல்
நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை
யுலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்"

என்றும் பலவாறு தமிழின் பெருமையினையும், பண்டைத்தமிழர் பெருமையினையும் எடுத்து எப்போதாவது ஒருசிலர் மேடைப் பிரசாரஞ் செய்யும்போது "எல்லாரும் எங்கும் தமிழ் முளக்கம் செய்தல் வேண்டும்" என்றளவில் நின்று அப்பால் அவரவர் மனப்போனபடி தங்கள் இல்லங்களிலும் கூட்டங்களிலும்—கோயில் குளங்களிலுங் கூட — அவசியமின்றிக் கண்டபடி பணங் கொடுத்துப் பிழைப்புக்காகப் படிக்கும் இங்கிலீசிலும் வேறு பாஷையிலும் விளம்பிப் பழகிக்கொண்டால் தமிழ் பேச முட்டுப்படுவோர் தமிழ் முழக்கஞ் செய்தல் எவ்வாறு? இவ்வாறு மேடைப் பிரசங்கஞ் செய்தல் வெற்றுரையும் நோக்கமில்லா ஆரவாரமுமாய் முடிதலன்றிப் பயனிலை. மேலும், தமிழ்க் கல்வியானது எளிதில் பெறும் மலிவான பொருளுமன்று. ஆதலால் தமிழ் மக்களுக்குரிய ஒழுக்கத்துக்கும் பழக்கத்துக்கும் இன்றியமையாத தமிழ்க் கல்வியும், அதனால் தென்கலையறிவும் அவசியம் வேண்டும் பொருள்களாம்.

"திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளுங் குன்றமெறிந்த குமரவேளும் அகத்தியனாரொடு தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார்" என இறையனார் களவியலுரையுள் கடைச்சங்கத் தலைமைப் புலவரான நக்கீரர் கூறிப்போந்தார். அதனால் தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று தமிழ்ச் சங்கங்களிலும் தமிழ் திருவருளினால் வளர்க்கப்பட்டு ஆக்கம் பெற்றது.

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே [illegible]
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்றாள்"

எனவரும் அரிய தமிழ்க் கவியானது பொதுவாகத் தமிழ் மக்கள் நினைவிலிருக்கவேண்டும். இன்னும், சேர சோழ பாண்டியர்களான மூவேந்தருந் தமிழைப் பரிபாலனஞ் செய்து வந்தனர் என்றும், அம் மூவேந்தர்கள் மூன்று மலைகளையும், மூன்று நாடுகளையும், மூன்று நதிகளையும், மூன்று பட்டணங்களையும். மூன்று முரசங்களையும், மூன்று தமிழினையும், மூன்று துவசங்களையும், மூவகையான குதிரைகளையும் முறையே யுடையர் என்று திருவள்ளுவமாலையில் எடுத்துச் சித்திரிக்கும் செய்யுள் வருமாறு:—

"மும்மலையு முந்நாடு முந்நதியு
முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு
— மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற்
றாரன்றோ
பாமுறை தேர் வள்ளுவர்
முப்பால்"

என்றார் கடைச்சங்கப் புலவரான சீத்தலைச் சாத்தனார். தமிழர் பொதுவாகத் தெரியவேண்டிய அரிய விஷயங்களை அறிவிக்கும் இந்த விசித்திரமான கவியானது தமிழ் கற்பவர் நாவில் அவசியமிருத்தல்வேண்டும்

கடைச்சங்கத்தி னிறுதிக் காலத்தில் விளங்கிய திருவள்ளுவர் துணைவியாகிய ஔவையார் தமக்கு நேசமான மங்கையின் பணச்சடங்கு காணுமாறு விஜயஞ் செய்திருந்த சேர, சோழ, பாண்டியர்களை உபசரிக்கும் வண்ணம் ஒரு கவி பாடி விவாக மண்டபத்தின் சமீபத்தில் நின்ற பட்ட ஆண்பனைத் துண்டம் ஒன்றைத் திருவருளினால் பெண்பனையாக்கி அது மூன்று கனிகளைக் கொடுக்கப்பெற்று அவையோர் வியப்ப மூவேந்தரையும் உபசரித்தாரென்று கூறப்படும்.

"திங்கட் குடையுடைச் சேரனும்
சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின்றார்
மணப் பந்தரின்கீழ்
நுங்குக்கண் முற்றியடிக் கண்
கறுத்து நுனி சிவத்துப்
பங்குக்கு மூன்று பழந்
தரவேண்டும் பனந்துண்டமே"

என்பது அவ்வினிய கவி. இப்படி அனேக புலவர்களும் அடியார்களும் அரிய தமிழ்ப் பாடல்கள் பாடிப் பெற்ற பேறுகளும் செய்த அற்புதங்களும் அனந்தம்.

"மொய்தாரணி குழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையு மங்கு வாழ
வைப்போன்"

என அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் பாடினர். இதனால் தமிழின் பெருமை நன்கு விளங்கும்.

தமிழ் கற்க விரும்புவோர் கல்விச் சிறப்பு, கற்பிக்கும் நல்லாசிரியர் இயல்பு, கற்கும் நன் மாணக்கர் இயல்பு, கற்கும் முறை, கறகும் நூன் முறை கல்வியறிவின் பயன் என்னும் இவைகளின் விரிவை அரும் பெரும்சாத்திரமாகிய திராவிடப் பிரகாசிகையிற் கண்டுகொள்க.

## திருவாசக பூசாவிதி

### மதிப்புரை

ஆசிரியப்பா

திருவளர் நல்லூர் செனித்திடு நாவலர்
பெருமான் நட்புப் பிறங்கிய வித்துவான்;
புவிபுகழுஞ் சிவபூசா துரந்தரன்
கவிமழை பொழி பெருங் காளமேகம்
சித்தாந்த சாஸ்திரத் தீஞ்சுவை யருந்தி
மெத்தவு மேன்மை விளங்கிய புனிதன
தெருவளரறிவு திகழ்ந்திடும் விவேகி
அருள்கிளர் சிவாலயமாக்கி நற்பூசனை
உருமுறை யினிற்புரிந் தோம்புநற் றொண்
மருவளருந் திருமயிலை மாநகரில் [டன்
அருளுடன் வந்தவ தரித்திடும்பானு
கருவளர் பல்லுயிர் காக்குஞ்சிவ நேசன்
எற்கும் பிறர்க்கு மின்பா நண்பன்
பொறபும் புகழும் பொருந்திய சுதனன்
எர்வதி ஜம்புலிங்கம் பிள்ளையென்
பேர்வதி யறிஞன் பெருவிருப் புடனே
ஆறுமுக நாவலர் அருளிய பெரிய
மாறிலாத "திருவாசக பூசா
விதி"யெனு நூலை மேதினி மாந்தர்கள்
துதியுடன் படித்துத் தோத்திரஞ்செய்தே
பூசா நியதிகள் புரிந்துய்யு மாறு
நேசமா யச்சினில் நிலைபெற வைத்தனர்
ஆதலா லிவரி னருட்டிகழ் செயலைப்
பூதலத்தோர்கள் புகழ்ந்து பாராட்டி
நன்றி கூறுதல் நலமுடைத்தாகு
மென்றுரை கூறியுமெ மாசிகூறியும்
பெருமா னருளைப் பிரிவிலா தேத்தியும்
இருநில மீதினி விருந்திடுவோமே.

ச போன்னுஸ்வாமிக்குருக்கள்.


# ஏலவிற்பனவு

## கரைச்சி நீர்ப்பாய்ச்சல் திட்டத்தில் நீர்வளம் நிலவளம் பொருந்திய திறமான காணிகள்

நாட்டுப் பொருள் அபிவிருத்திக் கொம்பனிக் காரியதரிசியிடமிருந்து கிடைத்த உத்தரவுப் பிரகாரம், கரைச்சிப் பகுதியில் முரசுமோட்டையிலே குறித்த கொம்பனிக்குச் சொந்தமாயுள்ள காணியை 1946-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு முழுநிலத்தையும் அல்லது பின்னர் விபரிக்கும் துண்டுதுண்டுகளாக எனனால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| | எக். | றூட். | பேர்ச் | | எக். | றூட். | பேர்ச் |
|---|---|---|---|---|---|---|---|
| துண்டு 79..x | 10 | 2 | 08 | முழுவதும் திருத்தப்பட்ட சிறுபோகக்காணி | 9 | 0 | 0 |
| | | | | காலபோகத்துக்குத் திருத்தப்பட்ட காணி | 1 | 2 | 08 |
| துண்டு 79AQ | 10 | 2 | 09 | முழுவதும் திருத்தப்பட்ட சிறுபோகக்காணி | 6 | 0 | 0 |
| | | | | காலபோகச்செய்கைக்குத் திருத்தப்பட்டகாணி | 3 | 0 | 0 |
| | | | | வெட்டி மூளைத்த காட்டில் | 1 | 2 | 09 |
| துண்டு 79AS | 9 | 2 | 31 | வெட்டி மூளைத்த பற்றைக் காட்டில் | | | |
| துண்டு 79AW | 9 | 2 | 31 | ,, ,, | | | |

குறித்த காணிகள் ஒரேயிடத்தில் AB , AW என்கூவற்றையும் AX , AQ என்பவற்றையும் பிரிக்கும் றோட்டுக்கு விலத்தப்பட்ட தெருவுடன் இருக்கின்றன. எல்லை கிழக்கு, முரசுமோட்டை குடியேற்றத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலம், தெற்கு ஹிலதெரு விஸ்தரிப்புக்கென விடப்பட்டுள்ள நிலம்; மேற்கு 79AB காணியும் இயற்கை ஆறும்: வடக்கு 79A காணி.

ஏலங்கூறி முடிந்ததும், விலைத்தொகையின் காற்பங்கு உடனே கட்டுதல் வேண்டும். மீதிப்பணம் ஒருமாதத் தவணைக்குள் கொடுபடாவிட்டால், கட்டிய காற்பங்குப்பணமும் பறிமுதலாய்விடும்.

இதுபற்றிய ஏனைய விபரங்களை, யாழ்ப்பாணம் திருநெல்வேலி, நாட்டுப் பொருள் அபிவிருத்திக் கொம்பனிக் காரியதரிசி ஸ்ரீ V. சோமசுந்தரம் அவர்களிடம் அறிந்துகொள்ளலாம்,

N. கந்தையா,
வெந்திஸ்மேஸ்தர்.

கொட்டடி,
7-9-46.

Mis. 184, 1—10—46.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேகவியோகம்

### சௌபாக்கிய லட்சுமி

பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலை அதிபர் பிரமஸ்ரீ ச. சோமசுந்தர ஐயரின் தர்மபத்தினி ஸ்ரீமதி சௌபாக்கியலட்சுமியம்மாள் நிகழும் புரட்டாதி மாசம் கO௨ விழாழக்கிழமை பரபதப்பிராப்தியானார். இவர் திரிகோணமலை பிரமஸ்ரீ சபாரத்தினக் குருக்களவர்களின் புத்திரி. பர்த்தாவின் குறிப்பறிந்து இல்லறத்தை இனிது நடத்திய உத்தமி தமதில்லத்துக்கு வந்தோரை இனிது உபசரித்து விருந்தினராக மதித்து மகிழ்வுடன் உணவளிக்கும் தருமசீலி; பஞ்சாங்க கணிதராயிருந்த பிரமஸ்ரீ வைத்தியநாதசாஸ்திரிகளையும், பருத்தித்துறை பாரதிப்பிரஸ் சொந்தக்காரரான விஸ்வநாத ஐயரையும், திரிகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமிகோயில் ஆதீனஸ்தரான சிவசுப்பிரமணியக் குருக்களின் அன்னையாரையும், தொல்புரவாசரும், இப்போது சிதம்பரத்தில் எம் எஸ் பாடசாலையிற் கல்வி கற்கும் மாணவருமான பாலகிருஷ்ண சர்மாவின் அன்னையாரையும் பெற்ற புண்ணியவதி. இவரது ஆன்மா சாந்தியடைக.

—கடித

### நேரு இலங்கைக்கு வருவரா?

இந்தியப் பிரதமமந்திரி பண்டிதர் ஜவஹர்லால்நேரு, கூடிய சீக்கிரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யக்கூடும் என்றும், அவருடன் ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியாரும் வருவர் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

## கால நிலை

சென்ற சனிக்கிழமை யிரவும் ஞாயிற்றுக்கிழமை இரவும் இங்கும் யாழ்ப்பாணத்துள்ள ஏனைய பலவூர்களிலும் பெருமழை பெய்தது; இம்மழை ஏற்ற காலத்திற் பெய்தமையினாற் பொன்மழையெனப் போற்றத்தக்கதாம்.

### அன்னை கிருஷ்ணபாயின் ஜெயந்திவிழா

நிகழும் வியவருஷம் புரட்டாதிமாசம் 9ந் திகதி (25-9-46) புதன்கிழமை பிற்பகல் 7 மணிக்கு முகமாலை ஆனந்தாஸ்ரமத்தில் அன்னை கிருஷ்ணபாயின் ஜெயந்தி விழா பளை D. R. O ஸ்ரீமான் ச ஸ்ரீநிவாசன் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. அப்போது ஸ்ரீமான் "ஞானம்" அவர்கள் அடியார்களையும் உபந்நியாசகர்களையும் வரவேற்றுப் பேசினர்.

திரு. க. சின்னத்துரை அவர்களால் பல யோகாசனங்கள் செய்து காண்பிக்கப்பட்டது.

திரு. K. S. ஆனந்தர் B. O L. "வள்ளுவரும் மனைவாழ்வும்" என்ற விஷயம் பற்றி அரும் சொற்பொழிவாற்றினர். திருசுப்பாக்குட்டி சுவாமிகள் "அடியார்பெருமை" என்ற விஷயமாகப் பத்திராசந்ததும்ப விசேஷித்த ஓர் விரிவுரை நடாத்தினர். "பெண்ணின் பெருமை" என்ற விஷயமாகப் பேசிய திரு. R T. சுப்பிரமணியமவர்கள், பெண்கள் சீர்திருத்தமடையவேண்டின் ஓர் பெண்கள் முன்னேற்ற சபை தாபிக்கவேண்டுமென வற்புறுத்தினர். கிராமபுனருத்தாரண சேவையை நன்கு கமக்காரர் சங்கத்தலைவர் திரு N. அருணாசலம் B A. அவர்கள் எடுத்து விளக்கினர் யாவர்க்கும் நன்றிமாரியை "ஞானம்" அவர்கள் பொழிந்தார். பூசையும் பி. சாதமும் வழங்கப்பெற்று சுமார் 11 மணியளவில் விழா இனிதுநிறைவேறியது.

கடித.

# யுத்தசேத நஷ்டக் கட்டணங்களைத் திருப்பிக் கொடுத்தல்

## ( அசைவற்ற ஆதனங்கள் மாத்திரம் )

யுத்த நஷ்டப் பணத்தைத் திரும்பிப் பெறுவதற்குச் சரியான காலத்தில் விண்ணப்பஞ்செய்து இதுகாறும் பணம் பெறாதவர்கள் தங்களின் தற்போதைய விலாசத்துடன் ஆதனங்களின் வரிமதிப்பு இல, ஆதனங்களிருக்குமிடம், இக்கந்தோரின் விண்ணப்ப இல, ஆதியவற்றை விபரமாக இவ்விலாகாவிற்கு எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும்.

(2) 1943-ம் ஆண்டிலும், 1944-ம் ஆண்டிலும் கட்டவேண்டிய பணத்தைத் தவறாது கட்டி, 1945-ம் அண்டு 53-ம் இல, யுத்தநஷ்ட அசைவற்ற ஆதன (ரத்துச் செய்தல்) சட்டப்படி 1946-ம் ஆண்டு பெப்ருவரி மாசம் 13-ந் திகதிக்கு முன் தமக்குரிய விகிதப் பணத்தைத் திருப்பிப் பெறுவதற்கு விண்ணப்பஞ் செய்யாதவர்கள், பின்வரும் விபரங்களுடன் 1946-ம் ஆண்டு அக்டோபர்மாசம் 31-ந் திகதியன்று அல்லது, அதற்குமுன் கிடைக்கத்தக்கதாக எனக்கு விண்ணப்பஞ் செய்யவேண்டும். கட்டிய பணத்தின் ஒருபாகத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காக அரசாங்கத்திற்கு விண்ணப்பஞ் செய்யப்பட்டிருக்கிறதென்பதை இத்தால் தெரிவிக்கின்றேன்:

(A) விண்ணப்பகாரரின் பெயரும், விலாசமும்

(B) ஆதனங்களின் (வீமாத்தீர்ந்த காலத்து) வரிமதிப்பு இல

(C) ஆதனங்களிருக்கும் தெருவின் பெயரும், வட்டாரப் பெயரும்,

1943-ம் ஆண்டு 4-ம் குவாட்டர், 1944 ம் ஆண்டு 2-ம் குவாட்டர் காலத்து வரிமதிப்பு ரசீதாவையும், யுத்தநஷ்டப பணங்கட்டிய ரசீதாவையும் விண்ணப்பகாரர் அனுப்பினால் விண்ணப்பங்களைக்கெதியில் தீர்க்கமுடியும். விண்ணப்பக்காரரின் பெயர்ரசீதாவிலுள்ள பெயரினின்றும் வித்தியாசப்பட்டால் அதற்குத் தகுந்தகாரணம் காட்டவேண்டும். பணம் கட்டியவரல்லாது வேறுயாராவது பேரில் ரசீது கொடுபட்டிருந்தால், அவரிடமிருந்து உரித்தாளர் பணத்தைத் தான் பெறுவதற்குத் தபால் கொண்டுவரவேண்டும். இறந்தவர்களின்பெயரால் விண்ணப்பஞ் செய்திருந்தால் தத்துவகாரர் தங்களின் தத்துவ உரிமையை ருசு செய்யவேண்டும்: அல்லது தத்துவவழக்கு இலக்கத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(3) விண்ணப்பங்கள் கிடைத்ததும், அதற்கத்தாட்சியாக இவ்விலாகா விண்ணப்ப இலக்கங்கள் விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படும் பணந் திருப்பிப் பெறும் விஷயமாக இவ்விலாகாவிற்கு எழுதும்பொழுது அவ்விலக்கத்தைத் தெளிவாகக் குறிக்கவேண்டும்.

அரசாங்கசபை பணங்கொடுப்பதற்கு அனுமதி செய்தபின்பே, கட்டணங்களைத் திருப்பிக் கொடுக்கமுடியும்.

எவ். லீச்,
யுத்த நஷ்ட வீமாத்தீர்தற் பதிலதிகாரி.

கொழும்பு.
27-9-46.

G. 82, 1&15-10-46.

# வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

உ

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும்பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

பெருந்தரை நடுவ ணுகிப் பிறங்கிய சரவ ணத்தில்
இருந்தனிக் கமல மொன்றிற் குமரவே ளிருந்த பான்மை
திருந்துநல் லண்டப் புத்தேள் சிந்தையாம் புண்ட ரீக
புரந்தனில் விரும்பித் தாதை வைகிய வியற்கை போலும்

குமாரக் கடவுள், பெரிய பூமியின் மத்தியிற் பொருந்தி விளங்குகின்ற சரவணத் தடாகத்திலுள்ள ஒப்பற்ற பெரிய செந்தாமரைப் பூவொன்றில் எழுந்தருளிய தோற்றமானது, அழகியநல்ல பிரமாண்டமாகிய விராட்புருடனுடைய இருதயகமலமாகிய சிதம்பரத்தின்கண்ணே பரம பிதாவாகிய நடராசமூர்த்தி (ஆன்மகோடிகளுக்குத் திருவருள்செய்யத்) திருவுளங்கொண்டு எழுந்தருளிய இயல்பை ஒக்குமென்பது கருத்து.

முருகமூர்த்தி அவதரித்து எழுந்தருளிய பெருமையைப் பெற்றுள்ளதாதலின் பிறங்கிய சரவணம் என்றார்: பாலசுப்பிரமணியப் பெருமான் எழுந்தருளிய தாமரைப் போது, அத்தடாகத்திலுள்ள ஏனைய பூக்களைக் காட்டிலும் விசிட்டமுடையதென்பார் "இருந்தனிக் கமலம்" என்றார். விராட்புருடனுடைய உள்ளக் கமலமாகச் சொல்லப்படும் சிதம்பரத்தின் கண்ணே பரம பிதாவாகிய நடராசமூர்த்தி யெழுந்தருளியவாறு. பூமியின் மத்தியிலுள்ள சரவணப் பொய்கையிற் பொருந்திய சிறந்த கமலப்போதொன்றிற் குழந்தை வேற்பெருமான் எழுந்தருளியிருந்தா ரென்றபடி. சிதம்பரம் விராட்புருடனுடைய இருதயமாகப் பாவிக்கப்படு மென்பதை "திருவளரா ரூர்மூலம் திருவானைக் காவேநாபி, மருவளர ண்ணாமலை மணிபூரம் நீவிர், இருவருங் கண்டமன்றம் இதயமாம்......" என வரூந் திருவிளையாடற் புராணத் திருவிருத்தத்தா லுமுணர்க.

பாசிலை பரவித் துள்ளி படுவன வுடுவைப் பாக
வீசுசை வலங்கா ராக வேறுசூழ் கமல மெல்லா
மாசறு பகலோ ராக வவற்றிடை மலர்ந்த கஞ்சந்
தேசுடை யிரவி யாகச் சிவனெனச் சேயங் குற்றான்.

பசிய (தாமரை) இலைகளிற் பரந்து உருளும் நீர்த் துளிகளே நட்சத்திரமண்டலமாகவும் திரையினால் வீசுண்டு அசைகின்ற பாசிப் படலங்களே கருமுகிலாகவும், புறத்தே சூழ்ந்து நிற்கும் தாமரைப் பூக்களனைத்தும் குற்றமற்ற (ஏனைய) சூரியர்களாகவும், அத்தாமரைப் பூக்களின் மத்தியில் அலர்ந்து விளங்கும் பிரதான தாமரை மலர் ஒளி யாடு கூடிய சிவசூரியன் போலாகவும் குமரமூர்த்தி அத்தாமரைப்பூவில் எழுந்தருளி யிருந்தாரென்பது கருத்து.

பசிய இலைகளிற் படிதலின்றிப் பரந்து உருண்டுதிரியும் நீர்த்துளிகளே, மேக மண்டலத்திற் காணப்படும் நட்சத்திரங்களாகவும், நீரிற் கிடந்து அசைகின்ற பசிய பாசிப்படலமே ஆகாயத்தில் ஊருகின்ற முகிலாகவும் சூழ்ந்து நிற்கும் ஏனைய தாமரை மலர்களெல்லாம் பன்னிரு சூரியராகவும், மத்தியிலுள்ள சிறந்த கமலமலர் பிரதான சூரியனாகவும் பொருந்த, அச் சூரியனிடத்துச் சிவபிரான் எழுந்தருளியவாறு, அந்தப் பிரதான மலரிற் குமரமூர்த்தி எழுந்தருளினா ரென்றபடி. வேறுசூழ்கமலம் என்றது மத்தியிலுள்ள கமலத்தை வேறாக்கிக் கூறியவாறும். மூன்றாமடியில் மாசு அறு என்றேனும் ஆசு அறு என்றேனும் பிரித்தலினால் மோனை சிதைவின்றி யிருத்தலும் பொருளொன்றா யிருத்தலுங் காண்க; பிரதான சூரியனாதலில் தேசுடை யிரவி யென்றார்.

[வீசு சைவலம் - திரையினால் வீசப்படுகின்ற பாசி]

## ஐப்பசிமாத விசேஷ தினங்கள்

6-ந் தேதி (22-10-46) செவ்வாய் பிரதோஷ விரதம் அன்றிரவு சந்திரோதய காலத்தில் (விடியற்புறம்) நரகசதுர்த்தசி ஸ்நானம்)
7 ,, (23-10-46) புதன் தீபாவலி
8 ,, (24 10 46) வியாழன் அமாவாசை விரதம்
9 ,, (25-10-46) வெள்ளி கந்தசஷ்டி விரதாரம்பம் மெய்கண்டார் குருபூசை, நல்லூர்க்கந்தசுவாமிகோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், புலோலிப் பசுபதீசுவர கோயில் கந்தசஷ்டி உற்சவாரம்பம்
11 ,, (27-10-46) ஞாயிறு பூசலார் நாயனார் குருபூசை
14 ,, (30-10-46) புதன் ஐயடிகள் காடவர் கோனாயனார் குருபூசை
15 ,, (31 10 46) வியாழன் கந்தசஷ்டி விரதம் சூரசம்மார உற்சவம்
16 ,, (1 11 46) வெள்ளி நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மாவிட்டபுரம், புலோலிப் பசுபதீஸ்வரர் கோயில் திருக்கல்யாண உற்சவம்
22 ,, (7-11-46) வியாழன் பிரதோஷ விரதம்
23 ,, (8-11 46) வெள்ளி திருமூல நாயனார் குருபூசை
24 ,, (9-11-46) சனி பூரணை விரதம் ஐப்பசிப் பரணி (வைரவர் விரதம்) நின்றசீர் நெடுமாறநாயனார் குருபூசை
25 ,, (10-11-46) ஞாயிறு கார்த்திகை விரதம், இடங்கழிய நாயனார் குருபூசை
29 ,, (14-11-46) வியாழன் சத்திநாயனார் குருபூசை
30 ,, (15-11-46) வெள்ளி நல்லூர்ச் சிவன்கோயில் யமசம்மார உற்சவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## செவ்வாய் அக் 1

காலை: 7-15 ஆரம்பம் 7.20 தமிழ்ச் செய்திகள் 7.30 வி ஏ நாராயணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 சுரல் இசை 8.30 எஸ் எம் ராமசாமிஐயர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 எஸ் எம் ராமசாமி ஐயர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் எம் ராமசாமி ஐயர் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 வி ஏ நாராயணன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7.30 தமிழில்செய்திகள் 7-45 முன்னேற்றம் 8 மதராஸில் உள்ளபடி (த்வாரம் வெங்கடசாமி நாயுடு வயலின், 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 3 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 நமது சங்கீதம் 3 10.30 முடிவு.

## புதன் அக் 2

காலை: 7-15 ஆரம்பம் 7.20 தமிழ்ச் செய்திகள் 7-30 ஜி ஜானகி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வீணை தனம்மாள் 8-30 கேவிஜயராகவலுநாயுடுபாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே விசயராகவலுநாயுடு பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கே விசயராகவலு நாயுடு பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2,45 முடிவு.

மாலை: 5 ஜி ஜானகிபாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7 15 வானொலி வாத்ய கோஷ்டி 7.30 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 பாயசூர் கோவிந்தராசபிள்ளை கும்பகோணம் டி எஸ் சம்பந்தம்பிள்ளை இரு வயலின்கள் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஐரோப்பிய சங்கீதம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கிலப் பேச்சு 10 ஐரோப்பியசங்கீதம் 10-30 முடிவு.

## வியாழன் அக் 3

காலை 7 15 ஆரம்பம் 7-20 தமிழ்ச் செய்திகள் 7.30 ஏ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 டி கே பட்டம்மாள் 8.30 கே கொச்சமணி பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே கொச்சமணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கே கொச்சமணி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 ஏ பாலசுப்ரமணிய பாகவதர் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஏ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 7.15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 எம் ஏ கல்யாணகிருஷ்ண பாகவதர் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 குற்றமுள்ள நெஞ்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஏ பாலசுப்ரமணியபாகவதர்பாட்டு 10-30 முடிவு.

## வெள்ளி செப் 4

காலை 7.15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 டி கே லக்ஷ்மணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 ஐயம்பேட்டை டி பி சந்தானம், ஏ எஸ் ஆர் கோவிந்தன் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஐயம்பேட்டை டி பி சந்தானம் ஏ எஸ் ஆர் சோலிங்கன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 ஐயம்பேட்டை டி பி சந்தானம், ஏ எஸ் ஆர் கோவிந்தன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 டி கே லக்ஷ்மணன் பாட்டு 5.40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 பதிப்பு வெளியீடுகள் 7.15 வாத்யகோஷ்டி 7-30 தமிழில் செய்திகள் 7.45 வாத்தியார் விசாரம் திருவிழிமிழலை சுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9-15 கே வி காளிதாஸ் பாட்டு 9-20 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக விவகாரங்கள் 10 இசை வேளை 10-30 முடிவு

# ஜீவாதார வைத்திய விளம்பரம்

நாடிப் பரீட்சையுடன்
3 நாள் 6 வேளை மருந்து 10 ரூபா
ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்

(Mis 160 30-8—30-11.46)

# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் சூடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும் கருவை அழியாமல் காக்கும் பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5.00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 27 26-4—25-10 (செ)

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis 25 23-4-46 to 22-3-47)

# நவராத்திரி விழா

காரைவெட்டி விநாயக வித்தியாலயத்தில் தேவியின்படம் வைத்து நவராத்திரிவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. விஜயதசமியிலன்று விசேட பூசையும், ஏடு தொடக்கும் வைபவமும் நடைபெறும்.





எங்கும் கியாதிபெற்ற எமது
ரேடியோ பீடிகளையே
எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
எல்லாஊர்களிலும் கிடைக்கும்
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்; தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

# அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்
## வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, October, 1, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org